# ஆதி மார்க்க னீதி மொழி

**August 2026**

***இதழ் 61 – ஆகஸ்ட் மாதம் 2026 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



## மூலமந்திரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்திர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

## பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்த பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்த தேசிகேந்திரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

## மகாசங்ஙல்ப மந்திரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் னோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே ! பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழியின் ஜூலை மாத மின்னணுச் சஞ்ஞிகையை அருமையான இந்நாளில் வெளியிடுவதில் மிகுந்த மகிழ்ச்சியும் பூரிப்பும் கொள்கிறோம்.

01.07.2026 முதல் 31.07.2026 வரையிலும் 12 ஞான அவை மற்றும் 3 இசை வகுப்பு நிகழ்வுடன் 61ஆவது இதழாக மலர்ந்துள்ள இம் மின்னணுச் சஞ்ஞிகையின் சிறப்புகள் யாவற்றையும் ஞானச் சூலில் உதித்து ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமான ஜீவிதா வடிவேலன் மிக அழகாகத் தொகுத்து வழங்கியுள்ளார்.

மேலும் ஞானச் சூலில் உதித்து நமது அவையின் அங்கமான கோபிநாத், இருக்கின்ற மக்களுக்கும் வருங்கால மக்களுக்கும் மிக மிக அவசியமான கைபேசியின் விழிப்புணர்வு பற்றியும் அதிலுள்ள நன்மை தீமை பற்றியும் விளக்கியுள்ளது மிகச்சிறப்பான ஒன்றாகும்.

கன்சுல் மகபியத்திலிருந்து வெளியாகும் நூறொளிவான ஜீவனின் ரகசியமும், கஞ்சாவாம் கோரக்கர் மூலி வேகமான ஆசானின் நாதமும், குருமணி மாலை பாடலில் உள்ள வடவெளியாம் இமய மகா மேருகிரியில் இருக்கும் ஈசனைத் தரிசிக்கும் தேவரகசியச் செயலும், ஞானச் சூலில் உதித்து நம் அவையின் அங்கமாக விளங்கும் கௌதம், வேத சாட்சியுடன் கூறியுள்ளது சிறப்பாகும்.

அதே போல் 11.07.2026ஆம் தேதியில் நமது யோவான் என அழைக்கப் பெறும் ஆதி மார்க்க னீதி அவையின் அங்கமான சிவகாசி குமார் பரிசுத்த வேதாகமத்தில் காது உள்ளவன் கேட்கக் கடவது என்பதின் ரகசியம் பற்றிக் கூறியதும் இவ் இதழின் சிறப்பாகும்.

முண்டக உபநிஷத்தில் உள்ள அயன்-ஆன்மா-பிரம்மம் என்ற அரும் பெரும் தேவ ரகசியச் செயலும், நரனின் புழுத் தலையானது ஆசானின் ஞானாக்கினியால் வைரத் தலை ஆவதும், சூரியன் உத்ராயணத்தில் இருந்து தட்சிணாயணம் நோக்கிப் பயணிக்கின்ற ஆடி மாதச் சிறப்பும், இருள் கிரகங்களான ராகு கேது இரண்டையும் வெளிச்சப் பொருளாக மாற்றும் பிரம்ம வித்தையும், சூக்ம தேகமே நித்திய அமலாண்மிக ஐஸ்வர்யம் என்பதும், படமாடும் கோயில் நடமாடும் கோயில் என்பதின் உள்ளமை ரகசியமும் பொதியப் பெற்று இரத்தினச் சுருக்கமுடன் மலர்ந்திருப்பதே இம் மின்னணுச் சஞ்ஞிகை.



Copyright © AMNA Trust, Chennai

இதைப் பார்த்துப் படித்துப் பயன் பெறும் மக்களும் தேடிவரும் எதார்த்த நன்மன மக்களும் எல்லாம் வல்ல பரம்பொருளாக நின்று விளங்கும் பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் பிறவா நெறியாகிய ஜென்ம சாபல்யச் செயல் பெற்றிட தெய்வம் அவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

உன்னத நோக்குடன் உண்மையைச் சுமந்து வரும் இம் மின்னணுச் சஞ்ஞிகை மேலும் மேலும் பல தேவ ரகசியச் செயல்கள் எல்லாம் தாங்கி வந்து உங்களிடத்தில் வெளிச்சப் பொருளாக விளங்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai 

*எழுதாமறை என்பது ரூபத்தில் வந்து னிற்கும் வந்த வேதமாகிய உனது ஆசரியரே.*

*இந்த அழிதேகத்தை விட்டதும் சுகசொரூபத்தைக் கைபோடுவதே னித்தியம். அப்படிக் கைபோடவில்லையென்றால், துக்கமாகிய னரகமே வருகிறது. துயரறுவது - னித்தியம். துயருறுவது - அனித்தியம்.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai August 2026

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 ஜூலை மாதம் அவை நிகழ்வுகள் – 2026 ஆகஸ்ட் மாதம் வெளியீடு

## 01-07-2026 ~ புதன்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆச்சிந்நு படியறிந்ந மாணாக்கன்றான்…** எனும் அமுதகலைக் ஞான போதம் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
பாரமார்த்தீக ஞானமளித்து உலக மக்களை உய்விக்கவே மெய்ஞ்ஞானச் செம்மல்கள் திருஅவதாரம் தாங்கி வருகிறார்கள். குரு பிரானின் தேவமணிச் சூலில் மறுபிறப்புப் பெற்றவர்களே பிரம்மத்தை அறிந்த பிராம்மணனாகத் திகழ்கிறார்கள். இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்ற எண்ணமே மரண பயம். ஆசானின் தயவால் அஷ்டாங்க யோகம் பழகித் தேர்வதன் மூலம் மரண பயம் மாற்றி வைக்கும் வாணி நாட்டில் குடியேறி குன்றாத பெருவாழ்வு வாழலாம்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 16 :** இறைவன் நம் சுவாசத்திற்கு வேண்டிய ஜீவ உணவைப் பூவில் வைத்துப் படைத்தான். அதன் மணம் முகர்ந்து பார்ப்பதற்காக அல்லாமல் ஜீவ வளர்வு வாழ்வுக்காகப் படைத்ததாகும்.

தெய்வ ஆசானின் வானமிழ்தமே ஜீவதேகத்தின் யோக உணவாகும். ஐம்புல உணர்வையும் அறிய வைக்கும் ஆறாவது அறிவைத் தொட்டுக் காட்டும் எல்லையே மெய்வழி. ஜீவாவி உண்ணுதற்கே சீர்மண மலர் படைத்தான் எனும் தெய்வத் திருவார்த்தைகள் நிஜ ரூப தரிசனையாக்கப் பெறும் திருத்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

**குருமணி மாலை - குருபிரான் அருளமுதம் :**
காமீல் நாயகத்தின் ஒளிர் நாவிலிருந்து பிறங்கும் திருவார்த்தைகள் நம் மதியைப் பூக்கச் செய்கிறது. தியானத்தின் மூலம் குருவின் திருமேனி என்ற வேத வார்த்தையின் மெய்ச் செயலை உணர்ந்தவரே அறிவு வடிவானவர். கன்சுல் மகபியத்திலிருந்து வெளியாகும் நூரொளியானது திவ்யமாகிய ஜீவனையே குறிக்கிறது. தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமாகிய இறைவனை அறிய வைக்கும் அறிவாகார சொரூபரே மெய் ஆசான். ஞானக் கடலாக வந்து, தத்துவ ரூபமாகிய தூல தேகத்தைக் கடப்பதற்கான உளவுகளை அருளிச் செய்து, தத்துவ அதீதமென்னும் பரிபூரணப் புராதனப் பொருப்பில் நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கும் குரு வள்ளலின் திருப்பாதம் பணிவோம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 04-07-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டங்ங ளவனி யானவெப் பொருளு மரியனின்…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.



Copyright © AMNA Trust, Chennai 

**குருபிரான் அருளமுதம்:**

தனக்குவமை இல்லாதான் தாளாக நின்று விளங்கும் ஜீவேசப் பொருளை அறிவதே தன்னையறிதல். மனுவைப் படைத்த சூட்சும வித்தினை குரு அருளால் அறிவதே மனுவின் தலையாய கடமையாகும். தேவ பதத்திற்கு உரிய வித்தாகிய மனிதனே இறப்பிற்குப் பின் உள்ள வாழ்வை அறியும் சக்தி பெற்றவன். வேழ முகத்தோனாகிய குருபிரானின் பெருந்தயவே நம்மை அத்வைதமாக மாற்றும். பெருமித வைப்பாகிய மெய்ச்செயல் எம் கரத்தில் உள்ளதை அறிந்த என் ஆதி மார்க்க நீதி அவையின் அங்கத்தினர்கள், வருங்காலத்தில் இம் மெய்ஞ்ஞானத்தை சீரோடும் சிறப்போடும் நடத்துவது திண்ணம்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் 240 :** திருப்பாற் கடலை காய்ச்சி வட்டாக்கிச் சிறு சிறு துண்டாக எடுத்து உருட்டி உங்கள் வாயில் போடுகின்றோம். உங்கள் வேலை வாயைத் திறந்து வாங்கி அப்படியே விழுங்க வேண்டியது தான்.

*ஜீவ சகோதரர் கௌதம்:* நம் மனதை செம்மையாக்கி அறிவு நிலைக்கு ஏற்றி வைக்கும் பிரம்ம வித்தைச் செயலே திருப்பாற் கடலைக் காய்ச்சி வட்டாக்கும் இரகசியம். வஞ்சப் புலன் சதியால் மறலியின் வாதையில் சிக்கிய நம்மை மீட்டெடுத்து, மரணமிலாப் பெருவாழ்வில் குடியேற்றி வைக்கும் குரு பிரானின் திருவடி நிழலில் சரணடைவோம்.

*ஜீவ சகோதரர் கோபிநாத் :* **கைபேசி பயன்பாட்டின் விழிப்புணர்வு:** நமது பிரத்தியேகமான ஆதார் எண் வங்கிக் கணக்கு ஆதாரங்களை இணையதள ஊடகங்கள் மோசடி செய்வதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே இவற்றில் மிகுந்த கவனம் வேண்டும். அரசு சார்பற்ற இடங்களில் கடவு எண்ணைப் பகிராமல் இருக்க வேண்டும். கைபேசியில் மிகவும் அவசியமான செயலி அன்றி மற்றவற்றைப் பயன்படுத்தாமல் இருப்பதே மிகவும் நன்மை.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் : அதிகாரம் :1 திருவசனம் 2 - 10**

கர்த்தரின் திரு னாவிலிருந்து பிறங்கும் வார்த்தைகள் அனைத்தும் னித்தியமானது. நம் மாமிச தேகத்துள் ஆவி, சுத்தாவி, பிரம்ம ஆவியாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் இறைபொருளை அறிவதற்கே ஆதியில் தேவ ஞானம் நம்மில் வைத்து படைக்கப் பெற்றுள்ளது. சென்ற னாள் சென்றிட்டாலும் இனி செல்லும் னாள் சென்றிடாமல் காக்கும் உளவுகளை அருளி, நம்மை அறிவின் வழியில் அழைத்துச் செல்லும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.

## 05-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, **னானிலந் நனிலே இங்ஙு னரசென்ம மெடுத்தோ ரெல்லாம்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

ஓர் மெய்யான தேவகுருவின் வாய்மையே நம்மை வானவராக வாழ வைக்கும் வல்லபம் கொண்டது. அருவுருவாக வரும் பெரியோர்களின் நாதத்தின் மூலம் நம் நெற்றிக் கண் திறக்கப்பெற்று சத்தியத்தில் நின்று திருவடியுடன் இரண்டறக் கலப்பதே அடக்கம். ஐந்தாம் யோனியான ஆவிடை எனும் தேவ யோனியில் பிறந்த மனுவுக்கே பிறவிப்பிணி தீரும். ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடைவதற்காக பெரியோர்களால் உண்டாக்கப் பெற்றதே கோவிலும் ஆகம விதிகளும். குருவின் அருளால் பஞ்ச கோச உடலில் ஒன்றான ஆனந்த உடலில் குடியேறி வாழ்வதே பேரின்பப் பெருவாழ்வு.



Copyright © AMNA Trust, Chennai August 2026

*ஜீவ சகோதரி அஞ்சனா :*

**அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை**
**ஆரிருள் உய்த்து விடும்**

என்ற திருவள்ளுவர் வாக்கிற்கிணங்க, ஓர் மெய்க் குருவின் அருளமுதத்துள் ஆழ்ந்து அறச்செயல் புரிந்தால், நம் மனம் அடங்கி அமரத்துவம் பெறும். குருவை அடையாதவரின் மனம் அடங்காமல் எமனின் கையகத்தாகி ஆரிருளில் மூழ்கிக் கிடக்கும்.

*ஜீவ சகோதரர் கேசவன் :*
அழிவுலக இச்சை விட்டு அழியாப் பதி குடியேறிய ஆசான் தயவால் நம்மிடம் அறிவதே தலையான தலை. அதுவே இறைவனாக இருக்கும் ஜீவனாகிய சிவலிங்கம் விளங்கும் தென்னாடாகும். இதனை ஆசான் அருளால் அனுபவமாகப் பெற்ற மக்கள் எந்நாட்டவராயினும் இறை பொருளைத் தன்னுள் தரிசித்து கயிலாயம் அடைவது சத்தியமே.

*ஜீவ சகோதரி வசந்தி :*
எமனைச் சங்காரம் செய்யும் வாளாயுதமானது பாரவான்களின் திருக்கரத்தில் உள்ளது. ஆதி அந்தம் அற்ற அனாதியாகிய இறை பொருளைத் தரிசிப்பவரே நல்ல கதி நிலை அடைவர். ஆசானின் நாதமே கஞ்ஞாவாம் கோரக்கர் மூலியாக நம் செவியில் பாய்ந்து ஞான போதை உண்டாக்கி பேரின்பத்தில் ஆழ்த்துகிறது.

*ஜீவ சகோதரர் சந்திரசேகர்(சென்னை) :*
ஆசான் அருளால் அவரவரின் நாமத்திற்குரிய பொருளை அறிவதே தன்னையறிதல். உடல் வளர்க்கும் பொய்க் கல்வியை விட்டு, உயிர் வளர்க்கும் மெய்க் கல்வியை குரு சன்னதியில் பழகித் தேர்வதே சன்மார்க்கம். சாகாக்கல்வி பயில்வதன் பலனாக அடைவதே மரணமிலாப் பெருவாழ்வாகும்.

*ஜீவ சகோதரர் துரைமுருகன் :*
நீதியான பிரளயச் செம்மலின் அருளால், அலைபாயும் நம் மனதின் ஆட்டங்கள் நின்று, அறிவாக மாறும் அதிசயத்தை நெடுங்காலம் இருந்து காண்பதே நின்றதொரு பிரளயமாகும். இறை குருவின் இரக்கத்தால் நம் இருதயத்துள் இறைவனைக் கண்டு வணங்குவதே மெய் வணக்கம். அவ் வணக்கமே ஒருவனை மரண எல்லையில் இருந்து மீட்கும் மாமருந்தாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 09-07-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. முத்துலட்சுமி சீனிவாசன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அஞ்ஞானக் கிழங்குகளைந் நெடுத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
விதிகளை விதிக்கும் விதியோனாகிய குருபிரானின் திருக்கரத்தில் நம் வினையை மாற்றக்கூடிய சக்தி உள்ளது. ஆசான் அருளால் அவரவர் நாமத்திற்குரிய பொருளை அறிந்து அடைதலே தன்னையறிதல். அலை பாயும் மனமானது ஒரு பிரம்ம னிஷ்டரின் முன் நிற்கும் போது, அசைவற்ற குணக்குன்றாகி பிரம்மத்துடன் ஐக்கியமாகிறது. இதன் பலனாக, நம் மீது அதிகாரம் புரியும் நவக்கிரகக் கோள்களின் தாக்கம் விலகி, மனவசியக் குளிகை நாட்டில் நாம் குடியேறுகிறோம்.



Copyright © AMNA Trust, Chennai 

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் எண் : 16 (தொடர்ச்சி)** **எல்லோரும் எமன் கை அடக்கம், அந்த எமன் எம் கையடக்கம்** என்ற யாரும் பெற முடியாத வல்லபம் எம் கையகத்தில் இருக்கிறது.

**குருபிரான் அருளமுதம் :**
ஆண்டவர்களின் சிவானுபவமே திருவாக்கியங்களாக அருளப் பெற்றுள்ளது. பெரியோரின் சொல்லுக்கு அடி பணிந்து வாழ்ந்தால், நம் அறியாமை நீங்கி அறிவுத் தெளிவு உண்டாகும். ஐம்புல வேடனாக நம் அகத்தில் மறைந்திருந்து செயல்படும் மனதைப் பற்றி அறிவதே ஞானத்திற்கான முதல் படியாகும். குருபிரான் தயவால் ஆதி அந்தமற்ற அனாதிப் பொருளை அறிந்து வாழ்பவன் சர்வ உலகிலும் ஜெயம் பெறுவான்.

**குருமணி மாலை - குருபிரான் அருளமுதம்:**
அறிவுக் கண் கொண்டு ஆதி ஒளியை தரிசித்தவர்களே வெளிச்சத்தின் பிள்ளைகள். ஞானக் கடலாக வரும் குருபிரானவர்கள் நம் ஜீவனில் கடுமையாகப் பற்றிக் கொண்டிருக்கும் வல் இருளை அகற்றிப், பழம்பொருள் ஞானத்தைப் பகர்கிறார்கள். ஓட்டாஞ் சல்லியாக இருந்த நரனை மனுவாக மாற்றி, தங்க உடலை தரிசிக்கச் செய்து மறைபடா தேவராக்குகிறார்கள். அறுசுவை ஒளியும் இடத்தின் இரகசியம் அறிந்தவர்களே வடவெளியாம் இமய மகா மேரு கிரியில் ஏறி, ஈசனைத் தரிசிக்கும் பாக்கியம் பெறுவர். பொன்மேனி மின் வீசும் புகழுடம்பில் குடியேறி வாழ்ந்தால், அழிவிலா நித்திய பூரண மேம்பாடுகள் அனைத்தும் பெற்ற சாயுச்சிய அரசனாக வலம் வரலாம். சாகா ஆங்ஙலையாம் உயிருடலத்தின் விஸ்வரூப தரிசனை பெற்ற அன்பர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களாக ஒளி வீசிக் கொண்டிருக்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 11-07-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரமனே வுருவெடுத்து பாரிடை குருவாய்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரர் கௌதம் :*
சுயம்பிரகாச நித்தியானந்த பிரம்ம சொரூபத்தின் அழியா தீபமே ஜீவன். திருச்சிற்றம்பலப் பொருளாகிய ஜீவன் உலக மாயையில் சிக்கி மனமாகிறது. ஆசான் அருளால் மனதை அறிவாக மாற்றி இறை அனுபவமாகத் தன்னுள் உணர்வதே முக்தி. சற்குருவின் திருவடியே அறியாமை எனும் இருளகற்றி, ஏக ரூப கோடி கிரணோதயத்தை நம் உள்ளத்தில் பதிக்கிறது.

**கோடாயிதக்கூர் திருவாக்கியம் – 241 :** ஞானம் அடையத் தடையாக இருப்பது உன் மாயை. அது உன் அறிவில் கலந்து தடை செய்கிறது. அம் மாயையை வெல்வதற்கு ஒரே உபாயம், உன்னை ஆண்டு கொண்ட குருபிரானின் திருவாக்கில் நீ நம்பிக்கை வைத்து நடப்பது தான்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*
பெரியோர்களின் சிவானுபவங்களின் விஸ்தீரணமே வேத வேதாந்தங்களாக அருளப் பெற்றுள்ளது. மனிதனுள் இயற்கை உண்மைக் கடவுளாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் பரம்பொருளை உணர்வதே மெய்ஞ்ஞானம். குருபிரான் தயவால் மாயையை வெல்லும் உபாயத்தை அறிந்தால், மரணமிலாப் பெருவாழ்வு பெற்று நித்தியனாக வாழலாம்.



Copyright © AMNA Trust, Chennai 

**பரிசுத்த வேதாகமம் : கொரிந்தியர் - அதிகாரம் 2 திருவசனம் 11 - 15**
*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* **காதுள்ளவன் கேட்கக் கடவன்** என்கிறது வேதாகமம். பெரியோர்களின் திருவாக்கை எதார்த்த உள்ளத்தோடு கேட்பவர்களே, தேவ ஆவியின் வெளிப்பாடாகிய ஜீவனை அறிந்து அடைவர். குருவின் நாத தொனியால் நாம் பூரணமடையும் தருணமே திருஅவதாரத்தின் மெய்ப் பொருள் தரிசனமாகிறது.

*ஜீவ சகோதரர் சங்கர் :*
இறைவனிடத்தில் இருந்து நாம் பெற்று வந்த வரமாதி வரமே அமானிதம். உலகப் பற்றுகளால் முக்குணத்தில் கட்டுண்ட நம் மனமானது, மெய்க்குருவின் அருளமுதம் மூலம் நிர்மலமாகி நிர்க்குணமாகிறது. திருவடி ஞானத்தை தன்னுள் அறிந்து பரமாத்ம சொரூபத்துடன் இரண்டறக் கலந்தவர்கள் சிவலோகப் பதவி அடைவது சத்தியமே.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 12-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தனித்தனற் றலைமைப் பெரும்பதி யரசை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

*ஜீவ சகோதரி முத்துலஷ்மி (சிவகாசி):*
குரு பிரானைத் தேடி அடைவதே மனிதப் பிறவியின் முதல் கடமையாகும். கோவில் வழிபாடு, ஆச்சார அனுஷ்டானம் இவற்றின் அசல் செயலை அறிய மனிதனுக்கு தரப் பெற்றதே ஆறாம் அறிவு. பிறவிப் பெருங்கடனைத் தீர்க்கும் வழி வகைகளை அருள்வதே வேதம். ஆசான் அருளும் பிரம்ம வித்தையைப் பழகித் தேர்ந்து, மெய் நெறியில் நிலைத்து வாழ்ந்தால் பிறவாப் பேறு பெற்று பேரின்பத்தில் திளைக்கலாம்.

*ஜீவ சகோதரி அருணா (சிவகாசி) :*
காலச்சக்கரத்தின் சூட்சமத்தை தன்னுள் அறியும் அதிவல்லபம் பெற்றவனே மனு. சூரிய, சந்திரன் இவ்வுலகிற்கு ஒளி தருவது போல், மனிதனின் நினைவெனும் ஆகாயத்தில் ஒளிரும் கோடி சூரியப் பிரகாசமே ஆன்மப் பொருள். புலன் வழி பற்றிப் புறவழி ஓடும் மனுவின் அகத்திலுள்ள இறை ஒளியைத் தரிசிக்க மெய் ஆசான் தயவு வேண்டும். அவரருளால் புலனடக்கம் பெற்றால், காலமற்ற எல்லையில் குடியேறிக் காலனை வெல்லலாம்.

*ஜீவ சகோதரர் பழனிசெல்வராஜ் (சிவகாசி) :*
அனுபவ அறிவே படிப்பறிவைக் காட்டிலும் சிறந்தது. அறிவுருவாம் ஆசான் அருளால் மெய்ப்பொருள் இன்னதென அறிந்து அடைவதே ஞானம். மனதை அகமுகமாக ஒருமைப் படுத்தும் செயலே அஷ்டாங்க யோகம். நம் மிடிமை இடராகிய சோம்பலை வேரறுத்து, சுறுசுறுப்பும் உயிருள்ளதுமான பஞ்சாட்சரப் பொருளை நம் உடைமைப் பொருளாக்கி வைப்பவரே உத்தம குரு.

*ஜீவ சகோதரர் அஜய்கிருஷ்ணன்:*
அதர்வண வேதம் சார்ந்த முண்டக உபநிஷத் மனிதனுள் ஆத்மாவே பரம்பொருள் என்பதை **அயம் ஆத்மா பிரம்மம்** என்கிறது. ஆங்கிரஸ முனிவர் சீடராகிய சௌனகரின் கேள்விக்கு விடையாக பராவித்யை என்ற பிரம்ம ஞானத்தை அறிந்தால் அனைத்தையும் அறிந்ததாகும் மற்ற யாவும் அபராவித்யை என்கிறார். ஆசான் அருளால் அலைபாயும் மனதை அகமுகமாகத் திருப்பி, இருதயத்தில் நிலைபெறச் செய்தால் தன்னை அறிந்து பிறவிச் சுழலில் இருந்து விடுபடலாம்.



Copyright © AMNA Trust, Chennai 

*ஜீவ சகோதரர் ஜீவானந்தம் (சிவகாசி):*

தாயாகித் தந்தையுமாய் தாங்குகின்ற தெய்வ ஆசானே நம் அக வாழ்க்கைக்கு உயிர்ப்பும் ஞானமும் அளிக்கிறார். தாயின் கருவறையில் தோன்றிய அழிதேகப் பிறப்பு, குரு அருளால் அழிவற்ற நித்திய மறு பிறப்பு அடைகிறது. மரணமிலாப் பெருவாழ்வின் வழியைக் காட்டி, வரமான சிரஞ்ஜீவியாக நம்மை வாழ வைப்பவரே வள்ளல்.

*ஜீவ சகோதரர் கார்த்திக் (சிவகாசி):*

அமானிதக் கடன் வாங்கி வந்த மனிதனின் தலையாயக் கடமை பிறவாமை பெறுவதே ஆகும். சர்வ வேதங்களில் அருளப் பெற்றிருக்கும் பரிபாஷை சொற்களின் மெய்ம்மை இரகசியத்தை தன்னுள் உணர்ந்தவரே அவதார மூர்த்தி. அவரது பேரிரக்கத்தால் சுழிமுனைப் பூட்டு திறக்கப் பெற்றவர்களே வேதத்தின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பை அறிந்து அனுபவிக்க முடியும். மூன்றாவது கண்ணின் இரகசியம் உணர்த்துவதே மனிதனின் கனவு உலகம். மாசில்லா மணியின் மலர்ப்பாதமே நம் மனதின் மாசறுத்து பரிசுத்தத்தில் ஆக்கும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 16-07-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **வாழ்வனைத்தும் தந்நெனது குலமுழுதும் தனையாண்டு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*

சர்வ உயிர்களின் வாழ்வாதார காரண காரியத்தை அறியும் வல்லபத்தை பெற்றவனே மனு. அபுசாலிகெனும் தவம் கொண்டெழுந்த தேவகுருவின் நிறை நாதமானது, நம்மை சாயுச்சிய அரசனாக வாழ வைக்கிறது. ஆசானின் சொல்லக விளக்காகிய நாத ஜோதியின் பிரகாசமே, அவரவர் நாமத்துக்குரிய இறை பொருளைத் தரிசிக்கச் செய்கிறது. நவக்கிரகக் கோள் மலிந்த பவக்காட்டில் சிக்கி தவித்த நரனின் புழுத்தலையானது, ஆசானின் ஞானாக்கினியால் வெந்து தணிந்து வைரத் தலையாக மாறுகிறது. மெய்க்குருவின் திருநோக்கிற்கு இணங்கி வாழும் யதார்த்த நன்மக்களே எமன் அச்சமற்ற ஆனந்த வாழ்வு வாழ்வர்.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் : 16 (தொடர்ச்சி)** உன்னை எம் ஆலவாய்ச் சூலில் வைத்துக் கருவாக்கி, அண்டமெல்லாம் விழுங்குகின்ற மகா அற்புதமான விஸ்வரூபக் காட்சியில் ஏற்றி உருவாக்கி, ஒரு நள்ளிரவில் தேவர்கள் எல்லாம் கண்டு அதிசயிக்கப் பெற்றெடுத்தோம்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*

நித்திய வாழ்வுக்கான உபாயங்களை அருள்வதே பெரியோர்கள் அருளிய சர்வ வேதங்களும். அமானிதத்தின் சிறப்பே திருவள்ளுவர் அருளிய திருக்கொரல். குரு வள்ளலின் நிறைமொழியே காலமற்ற எல்லையில் நம்மை குடியேற்றி, எமன் பதியை கடக்கச் செய்து சிவமாக்கும். அணுக் கோடியிலும் நிறைந்த ஆதியனை அறிந்து அடைவதே மெய்ஞ்ஞானம். ஆசானின் ஆலவாய்ச் சூலில் மறுபிறப்பு பெற்றவர்கள், ஏட்டில் உள்ள மூலமந்திரங்கள் அனைத்தையும் தன் கூட்டினில் நிஜமதாக்கி விஸ்வரூப தரிசனையாகக் காண்பர் .

*ஜீவ சகோதரர் சங்கர் :*

வாழ்வாங்கு வாழும் தன்மை பெற்றவனே மனு. அவனது ஐம்புல நுகர்விலும் அறுசுவையிலும் இறைவன் உண்டாக்கியதே ஜாதிகளற்ற சமத்துவம். ஆசானின்



Copyright © AMNA Trust, Chennai 

அருட்பிரகாசமே நரனாகிய ஒருவனை மனுவாக்கித் தேவனாக மாற்றுகிறது. சர்வத்திற்கும் முதற் பொருளான அவரவரின் மனதை வசியப் படுத்தும் செயலே மனோ வசியம். குருவின் பூம்பாதச் சிலம்பே நம் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை உபதேசமாக அருள்கிறது. ஆசான் துணையுடன் மின்னல் கிரணமாகிய ஜீவதேகத்தில் நாள்தோறும் நுழைந்து பழகும் சன்மார்க்கச் செயலை மெய் அனுபவமாகப் பெறும் தெய்வீக எல்லையே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

## 18-07-2026 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஜகத சற்குணா லங்விர்த சன்னதர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சூரியன் உத்ராயணத்தில் இருந்து தட்சிணாயணம் நோக்கி பயணிப்பதே ஆடி மாதத்தின் சிறப்பாகும். மூலமந்திரத்தை தன்னுள் நிரூபணையாக உணர்ந்து அனுபவித்து உச்சரிப்பதே பலனளிக்கும். உலகை சுபிட்சமாக வைத்திருக்கும் சூரியனையும் சந்திரனையும் இறைவன் அகம் புறமாகப் படைத்துள்ளான். காலச்சக்கர சுழற்சியில் நாம் இருக்கும் வரை வினையின் தாக்கம் உண்டு. குருபிரான் அருளால் காலமற்ற எல்லையில் குடியேறினால் நம் வினைகள் யாவும் தீர்ந்து இறைவனுடன் இரண்டறக் கலந்து நித்தியனாக வாழலாம்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 241 (தொடர்ச்சி)** நமது உலகப் படிப்பு கொண்டு ஞானம் கைவரவாகாது. ஒரு மெய்க்குரு பிரானை அடைந்த பின்பே நம் மனம் பிரம்மமாகிறது. இரும்பாகிய மனம் தங்கமாகும் செயலே ஞானம்.

*ஜீவ சகோதரர் கௌதம்:* ஜல அம்சமாகிய மனம் அழி அவா இச்சையால் கீழ் நோக்கிப் பாய்கிறது. மெய்க்குருவின் பேரிரக்கத்தால் எதிர்ஜலத்தில் ஏறும் பஞ்சாட்சரமாக பிரம்மமாக மாறுகிறது. மாயா சரீரமாகிய தூலமின்றி எங்கும் எவரும் எக்காலத்திலும் எவரையும் ஜீவ ஏற்றத்தில் ஏற்ற முடியாது என்ற தெய்வ வாக்கை மெய்யாக அறிந்தவர்களே மெய்ஞ்ஞானப் பாதையில் அறிவுத் தெளிவுடன் இருப்பர். அறியாதோர் அந்தரங்க நாஸ்திகனாகி அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடப்பர்.

*ஜீவ சகோதரர் கோபிநாத்:* **கைபேசி விழிப்புணர்வு :** செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்பம் நம் அன்றாட கடமைகளை நினைவூட்டும் உதவியாளராகச் செயல்படுகிறது. புதிய மொழிச் செய்திகளை மொழிமாற்றம் செய்து தகவல் தொடர்பை நமக்கு எளிதாக்குகிறது. கைபேசியை கவனமான முறையில் நாம் கையாளும் போது தகுந்த பலனளிக்கும் ஆயுதமாகவும், கவனமின்றி செயல்பட்டால் நம் வாழ்வை பாதிக்கும் அபாயமாகவும் மாறிவிடும்.

**பரிசுத்த வேதாகமம் : கொரிந்தியர் 1 : 3 திருவசனம் : 1 முதல் 5 வரை**
*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* ஆணவ இடும்பில் ஏறி அறியாமை எனும் இருளில் மூழ்கிக் கிடந்த நரனை, மனிதனாகப் பிரகாசிக்கச் செய்பவரே நின்றோர்கள் நிலையறிந்து கொடுக்கும் வள்ளல். கர்த்தராகிய குருபிரானே நம்மிடம் பொய் மெய் இன்னதெனப் பிரித்து உணர்த்தி நம் மாமிச இச்சையை விலக்கி மறலிகை தீண்டா மெய்ச் செயலில் ஏற்றி வைக்கிறார்கள்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 19-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வ மாகி...** எனும் தெய்வத் திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
தன்னையறியும் செயலை அடி னாதமாகக் கொண்டதே ஆதி மார்க்க னீதி அவை. இருதயம் எனும் சிமிழில் இருக்கும் கருமையை அறிந்தவரே முஸ்லிம். அறியாமை எனும் இருளகற்றி அறிவுப் பிரகாசம் அருளும் ஆசானின் நாதமே அருட்பெருஞ்ஜோதி. நெஞ்சகமாகிய நடு வீட்டில் இருக்கும் மூலமாகிய மெய்ப் பொருளை அறிவிப்பதே மூல மந்திரம்.

**அல்குர்ஆன் : சூரா – அல் முனாஃபிகூன் - திரு வசனம் : 63.9**
*ஜீவ சகோதரர் ரியாஸ்:* இறை நம்பிக்கை கொண்டவர்களும் அவர்களின் பிள்ளைகளும் அல்லாஹ்வை நினைவு கூறுவதே ஆன்ம லாபத்திற்குரிய செயல். புற உலகப் பற்றை விட்டு, ஆசான் அருளால் அகமுகமாகத் திரும்புவதே மெய்யறிவு. நித்திய செல்வமே குருவின் அருளமுதம். இமைப் பொழுதும் விலகாது குருவின் நினைவில் நிலைப்பவர்க்கு வானம் மற்றும் பூமியின் திரைகள் நீங்குகின்றன. குருபிரான் நம் மன அழுக்கினைச் சுத்திகரித்து சொர்க்கபதி வாழ்வில் நிலைக்கச் செய்கிறார்கள்.

*ஜீவசகோதரி சுதாமணி :*
நம் எண்ணங்களின் சேர்க்கையால் உண்டாகும் மனம் வெளி நினைவாகவும், சிந்தையற்ற தனித்தலைமை பதியாகிய அறிவு உள் நினைவாகவும் உள்ளது. நீதிச் செம்மலின் அருளால், அலைபாயும் நம் மனமானது லயமாகி, ஓரறிவாய் நிற்கும் செயலே நின்றதொரு பிரளயம். தசா புத்தியை மாற்றும் இருள் கிரகங்களான ராகு கேது, ஆசான் அருளால் வெளிச்சப் பொருளாக மாறும் செயலே பிரம்ம வித்தை.

*ஜீவசகோதரி சித்ரா( பவானி) :*
குருபிரான் தன் நாதம் கொண்டு அருளும் அகரப் பொருளால் நம் மனம் அறிவாகி பிறவிப் பிணி தீர்கிறது. காலம் கடந்து நிற்கும் மெய்ப்பொருளைத் தன்னுள் அறிந்து அடைவதே மரணமிலாப் பெருவாழ்வாகும். வித்தகப் பெருமானின் திருப்பாதம் பற்றினால் வினை தீர்ந்து பிறவாமை எனும் பெருவாழ்வு பெறலாம்.

*ஜீவசகோதரி நந்தினி :*
வேதத்தின் உட்பொருள் ஆதார உயிர்ப் பதிப்பின் ரகசியத்தை அறிய வைக்கும் தலமே ஆதி மார்க்க னீதி அவை. கவனம் என்பது நம்மை காக்கும் இறைபொருளாகும். ஆசான் அருளிய பிரம்ம வித்தைச் செயலை, திட கவனத்துடன் நித்தம் பழகி வந்தால் அறிவுத் துலக்கம் உண்டாகும். தன் ஜீவன் நஷ்டம் அடையாமல் பாதுகாக்கும் அறச் செயலே ஜீவகாருண்யம்.

*ஜீவ சகோதரர் கணேஷ் கிருஷ்ணன் :*
உயிரைக் காட்டும் உலக மெய்க்குருபரனின் அருளால் நம் அறியாமை எனும் இருள் அகல்கிறது. பாதம் அறிந்தவர்க்கே வேதம் விளங்கும் எனும் மெய்ச்செயலை தன்னுள் அனுபவமாகப் பெற்றவரே வரோதயர். பற்றற்றானாகிய இறைவனுடன் இரண்டறக் கலந்து இறை சன்னதங்களுடன் வரும் குருபிரானின் பேரிரக்கமே நரனை மனுவாக்கி பின் தேவராக்க முடியும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.




Copyright © AMNA Trust, Chennai 

## 23-07-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **தேகம் னம் போலுள்ள எம் குருனாதருக்கு...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவ சகோதரர் சங்கர் :*

மூலப் பழம்பண் ஆரமணி உண்டைப் பெட்டகத்துள் பொதிந்திருக்கும் ஆன்மப் பொருளை அறிவிப்பவரே புராதன வேதியர். நமது அறியாமை எனும் இருளை அகற்றும் பிரகாசப் பொருளே அருட்பெருஞ்ஜோதி. உள்ளமாகிய மகா மகசூக்கான இருதயத்துள் பொதிந்துள்ள பஞ்சாட்சரப் பொருளை கைக் கொண்டவர்களே மெய்ஞ்ஞான மகத்துக்கள். அவர்களின் அருள் நாவிலிருந்து பொங்கி வரும் செங்கை நதி கங்கையானது, ஜீவன் கண்ட சென்ம சாபல்ய குல மக்களாக நம்மை வாழ வைக்கிறது. சர்வ சன்னதங்களையும் தன் முத்திரைக் கரத்தில் தரித்து வரும் குருபிரானிடத்தில் சரணாகதி அடைந்தவர்களை, அன்னம், மயில், வாசி எனும் குதிரையில் ஏற்றி அசோக வாழ்வெனும் கைலாசத்தில் குடியேற்றி வைக்கிறார்கள்.




**எமன்படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் எண் 16 (தொடர்ச்சி) :**

மூல புருஷர்கள் ஜாதி குலங்களை வகுத்து மக்களை நீதி வழியில் நடப்பித்து, மெய்ஞ்ஞானப் பயிரைச் செழித்தோங்கி வளரச் செய்தார்கள்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

சைவ நாற்பாதங்களான சரியை, கிரியை, யோகம், ஞானத்தின் மூலம் உலக மக்களுக்கு ஞானத்தைப் போதிப்பவரே மெய்க்குரு. அவர்கள் தம் தெய்வீகத் திருப்பார்வையின் மூலம் பிரணவக் கலையை நம் சிரசில் பதிக்கிறார்கள். இதன் பெரும் பலனாக , சர்வ மதங்களின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமை எனும் மெய் மதத்திற்குள் நாம் அங்கமாகிறோம். ஜீவ சுத்தாவியின் ஆத்ம வடிவினுக்குள் அண்டாண்டங்களும் நிறைந்த பொருளாக மகா வலிமை பிறங்க உறுதியுடன் நின்று விளங்கும் மெய்யை மெய்யாக நம்மிடம் ஆக்கி வைக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

*ஜீவ சகோதரர் வடிவேலன் :*

மனிதன் பொய் இன்ப உணர்ச்சியில் இருந்து மாறி மெய் உணர்வு பெறுவதற்கென, மெய் மகத்துக்கள் அருளியதே வேத வேதாந்தங்கள். நால்வகை யோனி எழுவகைத் தோற்றத்தை தன்னுள் அறிந்து வாழ்வதற்கே மனுவுக்கு ஆறாவது அறிவு தரப் பெற்றுள்ளது. மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரத்தை பிரம்ம பீடமாகிய மெய் ஆசான் துணையுடன் செயலாகப் பழகியே, ஜீவன் சிவலிங்கம் என்ற மெய் அனுபவத்தைப் பெற முடியும். குரு பிரான் வழிகாட்டுதலின் படி, முறையான வணக்கம், மாசற்ற இரக்கம், வருங்கால தீர்க்கம் எனும் மந்திர ஸ்திரத்தை நம் மனதில் ஊணி அழுத்துவதன் மூலம் அந்நாட்டிற்கான வேத வித்தாக மாற்றப் பெற்று, வரமான சொர்க்கபதி வாழ்வு கைவராகிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.


Copyright © AMNA Trust, Chennai

## 26-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. சண்முகப்ரியா செந்தில்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறைந்தும் ஒருவருக்காய் அருளிய ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவ சகோதரி சஹானா :*

அசத்தை நீக்கி சத்தை மட்டும் அருளுகின்ற ஜீவன் முக்தர்களின் வாக்கே வேதாந்தம். கங்கை நதியின் மைந்தன் பீஷ்மர் என்பதின் தாத்பர்யம், தீர்த்தமாகிய தேசிகரின் வாசகத்தால் மறுபிறப்பு பெறுவதாகும். குருவாகிய பரசுராமர் சீடராகிய பீஷ்மரின் அறியாமையை அகற்றும் திருச்செயலே இன்று ஆதி மார்க்க னீதி அவை எனும் குருஷேத்திரத்தில் நிறைவேறி வருகிறது.

*ஜீவ சகோதரர் திருமுருகன்:*

இறைவன் மனிதனுக்கு அருளிய சீதனமே அமானிதம் எனும் ஆறாம் அறிவு. அதனைக் கொண்டு ஆசான் அருளால் ஏழாம் பிறப்பு எடுப்பதுவே மனுவின் கடமை. குருவின் திருப்பார்வை மூலம் நாம் அறிவதே திருப்பாவை. அறிவு வடிவாக வரும் ஆசானின் அருளால் மனம், சூக்குமமாக மாறுவதே மரணமிலாப் பெருவாழ்வு.

*ஜீவ சகோதரி பவித்ரா ஜெயக்குமார் :*

அறிவுச் செல்வமே அழிவற்ற அருட் செல்வம். அறிவுப் பசிக்கான உணவே மன அமைதி அளித்து அழியா மெய்ப் பாதையில் நம்மை இட்டுச் செல்லும். சுத்த அறிவாகிய சூக்கும தேகமே நித்திய அமலாண்மிக ஐஸ்வர்யம். குரு அருளால் ஞானச் செல்வத்தை பெற்று எம பயத்தைக் கடந்து வாழ்வதே மெய்யறிவு. சத்திய வேதம் அருளிய படி, நம் நினைவெனும் ஆகாயத்தில், அழியா நிதிச் செல்வத்தை சேர்த்தால் ஆன்மீக வாழ்வு பூரணமாகும்.

*ஜீவ சகோதரர் கிரிதரன்:*

இறைவனின் படைப்பில் முதன்மையானவன் மனிதனே. கேள்வியின் நாயகனாக வரும் குரு பிரான் அருளால், அறிவின் அடி நாதமே வித்தை அவித்தை என்பதை அறியலாம். மனதின் பிடியிலிருந்து நாம் விடுபடுவதே சுதந்திரம். மனம் பிரம்மமாகி துக்க உடலினுள் இருக்கும் சுகவுடலைக் காட்டும் செயலே பிரம்ம வித்தை. அவரவரின் நாமத்திற்கு உரிய பொருளை காண்பதே காணும் பொங்கல். சப்த சப்தாதிய சாயலாகிய இறைவனை குரு பிரானின் நாதத்தின் மூலமே அறிய முடியும். அறிவும் ஆசானும் ஒன்றே என அறிவதே அறிவு.

*ஜீவ சகோதரர் கார்த்திகேயன்:*

ஆசானின் அருள் னாவில் கலைவாணி குடியிருக்கிறாள். ஐந்தறிவு நுகர்ச்சியில் இருந்து விடுபட்டவரே மெய்யுணர்வில் மேலோங்கி நிற்பர். ஆசான் அருளால் அசலான இறைவனை தன்னுள் அறியும் வழியே மெய்வழி. புற உலக அழி பொருட்களின் மீதுள்ள கவனம் நீங்கி, அகமிய உலகின் அழியாப் பொருள் மீது நம் கவனம் அதிகமானால் தோற்றமில்லாமை எனும் அரூப வடிவமாகிய இறை பொருளைத் தரிசிக்கலாம்.

*ஜீவ சகோதரர் ஜெயக்குமார்:*

மாயையில் இருந்து விடுபடுவதே விழிப்பு. திருவெனும் அட்சரத்துள் திரட்டி வைத்திருக்கும் இறைபொருளை அறிய வைப்பவரே மெய்க்குரு. சர்வ படைப்புகளுக்கும் காரணமான படைப்பு கர்த்தாவை தன்னுள் காண்பதே இறைகாட்சி. இயற்கை உண்மை கடவுளாக, இலஞ்சிய லட்சிய உயிராக நின்று நம்மை இயக்கும் ஆன்ம ஒளியே அறிவு. ஆசான் அருளும் பூட்டடங்காச் சாவி கொண்டு திறந்தே சொர்க்க பதிக்குள் நுழைந்து கற்பாந்த கோடி கால, கருவூல வாழ்வு பெற முடியும்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:*

ஆசானின் அருளமுதம் மூலமே வேதம் உயிர் பெறுகிறது. தன்னை அறிவதற்குக் கொடுக்கப் பெற்றதே மனித தேகம். தன்னையறிந்த பெரியோர் பேரிரக்கம் கொண்டு, ஏழ் நிலைக் கம்பமாக ஊடுருவி நிற்கும் திருப்பாதத்தை தரிசிக்க செய்து, பிறவாமை எனும் பேரின்ப பெருவாழ்வில் நம்மை குடியேற்றி வைக்கிறார்கள். குருபிரானின் ஒரு திருதரிசனை மூலம் இருவினை தீர்க்கும் செயலே, முயற்சி திருவினையாக்கும் என்பதாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 30-07-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அஞ்ஞானக் கிழங்குகளைந் நெடுத்து...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

உலகில் ஆக்கலுக்கும் அழிவுக்கும் காரணமான சூரியனும் சந்திரனும் போல் மனிதனிடத்தில் அறிவும் மனமும் காரணமாக உள்ளது. சகல உயிர்களிலும் உள்ள அறிவாகிய மூன்றாவது கண்ணை அறியும் அறிவுக்கண் பெற்றவன் மனு ஒருவனே. வேத உட்பொருளை உணர்பவரே மெய்ப் பலன் பெறுவர். படமாடும் கோவில் தெய்வத்திடம் பக்தியை விட்டு, நடமாடும் தெய்வமான பெரியோரை நம்பினால், அவரின் அன்பே நம்மைச் சிவ நிலையில் ஏற்றி வைக்கும். செத்திடம், பிறந்திடம், இனிச் சாகாதிருக்கும் இடம் அறிவதே தன்னை அறிதல். பொறிகள் ஓடாத காலமற்ற எல்லையில் குடியேறி வாழ்வதே மரணமிலாப் பெருவாழ்வு.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் : 16 (தொடர்ச்சி)** ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற உயிருக்கு உயிரான பிரத்தியட்ச செயலை மறுபிறப்புப் பெற்ற என் மக்களே அறிவர். சமரச சன்மார்க்க ஒருமைப் பாடுடன் மாசு மருவற்ற திட்டவட்டமான தீர்மானமுடன் தன்னையறிந்த என் மக்கள் நிறைந்த ஊர் இது ஒன்றே. இறைவனின் திட்டமே இந்த அதி வல்லபச் செயல் இக்காலத்தில் இங்கு உண்டானதின் காரணமாகும்.

**குருபிரான் அருளமுதம்:**

மறுபிறப்பின் ரகசியம் உணர்த்த பெரியோர்கள் எடுத்து வைத்ததே மதச் சடங்குகள் ஆகும். பரிசுத்த ஆவியில் பிறந்தவர்க்கே **ஒன்றே குலம் ஒருவனே தேவன்** எனும் உயிருக்குயிரான செயல் கைவரவாகும். கர்த்தாதி கர்த்தராகிய சொற்சத்தி மனுமகன் தன் சொந்த மகவுகளின் நரன் எனும் பழைய நாமத்தைக் கொன்று மனுவாக எழுப்பி தேவ நிலைக்கு உயர்த்துவதே, தீக்ஷா நாமம் வழங்கும் செயலாகும். ஆசானின் ஒரு மொழிக் கீதையே, கிரந்தம் மற்றும் பெருமறை சாஸ்திரங்கள் பிளந்து காட்டி சமரச சன்மார்க்கச் செயலை உணரச் செய்கிறது. ஒருவன் நிர்க்குண நிலைக்கு ஆகும் செயலே மோட்சம் என்கிறது மோட்ச சன்யாச யோகம். வழி மறையோன் குருவின் அருளால் செயலுள்ள மூலமந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் பெற்று, கூடிருக்கக் கைலாசம் கண்டு பிறவாமை பெறும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை .

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது .



Copyright © AMNA Trust, Chennai 

**இசை வகுப்பு**
**தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்**

**05-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பரவிரதாச் சாரியென்று மேசமயாச்சாரி னானென்...** என்ற ஐம்மணிப் பொதிகைப் பாடலுடன் அவை மலர்ந்தது. முரீதுச் சுருக்கம் பாடலின் காப்புச் செய்யுளான 24 பாடல்களும் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**12-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அளவிலா வெகு காலமிப் பூமியில்...** என்ற குரு ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. முரீதுச் சுருக்கம் பாடல்கள் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

**19-07-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய ஞான முறையீடு பாடலில் உள்ள **ஓங்காரத் தொனியான கபாலத்...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. தெய்வத் தேடு கூடகம் பகுதியில் உள்ள **கோலெடுத்தா தம்பியோ அந்தக்...** என்ற பாடல் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 ஜூலை மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 69**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**

**Account Number: 50200047470073**

**IFSC: HDFC0000323**

**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு***: *இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 61 – Month: August 2026*